ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2020.12.18 |

# மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி[1] - 2019

## நாட்டின் வர்த்தக மற்றும் நிர்வாக தலைநகரத்தை தன்னகத்தே கொண்ட மேல் மாகாணம், பொருளாதாரத்தின் முன்னோடியாக தொடர்ந்தும் விளங்கியது. எனினும் பிராந்திய ஏற்றத்தாழ்வு சுருக்கமடைவதற்கு பங்களித்து அதன் பங்கு வீழ்ச்சியடைந்தது

**முக்கிய அம்சங்கள்**

*பெயரளவிலான மொ.உ.உற்பத்தி – 2019*
*ரூ.15,016.1 பில்*

*மா.மொ.உ.உற்பத்தி பங்கு அதிகூடியது:*
*மேல் மாகாணம்*
*ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் பங்கு வீழ்ச்சியடைந்துள்ளது*

நாட்டின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பாரிய பங்கினை (39.1 சதவீதம்) மேல் மாகாணம் தனதாக்கிக் கொண்டது. எனினும், ஏனைய மாகாணங்களில் கிடைத்த அதிகரித்த பங்களிப்பின் காரணமாக அதன் பங்கு 2018 இலிருந்து 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மத்திய (11.5 சதவீதம்) மற்றும் வடமேல் (10.7 சதவீதம்) மாகாணங்கள் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளுக்கு தரப்படுத்தப்பட்டன.

வடக்கு, கிழக்கு, வடமேற்கு மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களின் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி பங்குகள் அதிகரித்த அதேவேளை மேல், மத்திய, தென், வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் ஆண்டிற்கு ஆண்டு பங்கு வீழ்ச்சிகள் அவதானிக்கப்படக்கூடியதாகவிருந்தது.

வரைபடம் 1
மா.மொ.உ.உற்பத்தி பங்குகள் - 2019




அட்டவணை 1
மாகாண ரீதியான பெயரளவு மொ.உ.உற்பத்தி
(நடைமுறை சந்தை விலைகளில்)

| மாகாணம் | 2018அ | | 2019ஆ | |
|---|---|---|---|---|
| | பெறுமதி (ரூ.பில்.) | பங்கு (%) | பெறுமதி (ரூ.பில்.) | பங்கு (%) |
| மேல் | 5,681.7 | 39.6 | 5,865.4 | 39.1 |
| மத்திய | 1,680.1 | 11.7 | 1,719.7 | 11.5 |
| வட மேல் | 1,514.4 | 10.5 | 1,608.3 | 10.7 |
| தென் | 1,444.6 | 10.1 | 1,489.4 | 9.9 |
| சப்பிரகமுவ | 1,049.6 | 7.3 | 1,145.4 | 7.6 |
| கிழக்கு | 805.6 | 5.6 | 861.4 | 5.7 |
| வட மத்திய | 809.6 | 5.6 | 810.5 | 5.4 |
| ஊவா | 792.4 | 5.5 | 805.9 | 5.4 |
| வட | 588.2 | 4.1 | 710.3 | 4.7 |
| **இலங்கை** | **14,366.1** | **100.0** | **15,016.1** | **100.0** |

### நடவடிக்கை ரீதியான செயலாற்றுகை

### பொருளாதார நடவடிக்கைகளுக்கான மாகாண ரீதியான பங்களிப்பு

வேளாண்மை நடவடிக்கைகளின் நியதிகளில் அனைத்து மாகாணங்களும் 8.4 சதவீதத்திலிருந்து 15.9 சதவீத வீச்சில் சீராகப் பங்களித்துள்ள அதேவேளை தென், வட மேல் மற்றும் மத்திய மாகாணங்கள் நாட்டின் வேளாண்மை நடவடிக்கைகளுக்கு முன்னணியாக பங்களித்த மாகாணங்களாக விளங்கின (வரைபடம் 2).

மேல் மாகாணம், 45.8 சதவீதம் கொண்ட பங்களிப்புடன் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஆதிக்கம் செலுத்திய அதேவேளை மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையில் உயர்வாகப் பங்களித்திருந்தன.

பணிகள் நடவடிக்கைகளின் நியதிகளில் மேல் மாகாணமானது 39.6 சதவீதம் கொண்ட அதியுயர் பங்களிப்பினைப் பதிவுசெய்த அதேவேளை மத்திய மற்றும் தென் மாகாணங்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையில் உயர்வாகப் பங்களித்திருந்தன.

அட்டவணை 2இல் காண்பிக்கப்பட்டவாறு, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்கள் மூன்று நடவடிக்கைகள் முழுவதும் அவற்றின் பங்குகளை அதிகரித்துள்ளன. மாறாக, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களின் அனைத்து நடவடிக்கைகளினதும் பங்குகள் முன்னைய ஆண்டிலிருந்து வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளை ஏனைய மாகாணங்கள் கலந்த செயலாற்றமொன்றினைக் காண்பித்துள்ளன.

வரைபடம் 2
மாகாணங்களின் நடவடிக்கை ரீதியான செயலாற்றம் (%) - 2019




அட்டவணை 2
மா.மொ.உ.உற்பத்தியின் துறைவாரியான உள்ளமைப்பு- 2018 மற்றும் 2019

| மாகாணம் | வேளாண்மை(%) | | கைத்தொழில்(%) | | பணிகள்(%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 | 2019 | 2018 | 2019 | 2018 | 2019 |
| மேல் | 9.6 | 9.7 | 49.8 | 45.8 | 38.9 | 39.6 |
| மத்திய | 12.3 | 11.5 | 12.0 | 11.8 | 11.5 | 11.3 |
| தென் | 16.6 | 15.9 | 6.6 | 6.8 | 10.8 | 10.6 |
| வட | 7.6 | 9.6 | 3.5 | 5.0 | 3.9 | 4.0 |
| கிழக்கு | 11.9 | 10.3 | 3.6 | 4.9 | 5.7 | 5.6 |
| வட மேல் | 14.6 | 15.3 | 9.6 | 9.8 | 10.4 | 10.6 |
| வட மத்திய | 9.4 | 8.7 | 3.2 | 3.3 | 6.2 | 6.0 |
| ஊவா | 9.5 | 10.5 | 5.3 | 5.0 | 5.1 | 4.9 |
| சப்பிரகமுவ | 8.6 | 8.4 | 6.4 | 7.7 | 7.6 | 7.5 |
| **இலங்கை** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

[1] மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியினை கூறுகளாக வேறுபடுத்துவதன் மூலம் மேலிருந்து கீழ் அணுகுமுறையொன்றினைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டு வருகின்றது. மாகாணங்களுக்கான மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியினை மதிப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியில் ஒவ்வொரு துறை விடயத்தினதும் பெறுமதியானது மாகாண மட்டத்தில் தொடர்புடைய குறிகாட்டிகளைப் பயன்படுத்தி பங்கீடு செய்யப்படுகின்றது.

**மாகாணங்களுக்குள்ளான பொருளாதார நடவடிக்கைகள்**

வட மாகாணம் தவிர அனைத்து மாகாணங்களும் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட பங்களிப்புடன் முதன்மையான பணி நடவடிக்கைகளை கொண்டுள்ளன. வரைபடம் 3 இல் காண்பிக்கப்பட்டவாறு அனைத்து மாகாணங்களிலும் கைத்தொழில் நடவடிக்கைகள் 16.7 சதவீதத்திலிருந்து 32.1 சதவீதம் வரையான வீச்சில் பணிகள் நடவடிக்கைக்கு அடுத்ததாக நிலைபெற்றுள்ள அதேவேளை, வேளாண்மை நடவடிக்கைகள் மாகாணங்கள் முழுவதும் 1.9 சதவீதத்திலிருந்து 15.1 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன.

வரைபடம் 3
மாகாணங்களுக்குள்ளான பொருளாதார நடவடிக்கைகள்

